வேளாண்மைத் துறை அமைச்சரோடு நடந்த கூட்டத்தின்போதும், மீனவர்களுக்கு முழு மானியத்துடன் மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தினேன். தற்போது 31-1-2005 ஆம் நாளிட்ட மத்திய அர்சின் ஆணையில், மானியம் மற்றும் கடனுடன்தான் மீனவர்களுக்கான மறுவாழ்வு நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மீனவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை முழுவதுமாக திரும்பப் பெறத் தேவையான மொத்தத் தொகை 923.01 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசு 356.54 கோடி ரூபாய் மானியமாக, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அதாவது - National Calamity Contingency Fund-லிருந்து வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாநில அளவிலான பேரிடர் நிவாரண நிதி, அதாவது, Calamity Relief Fund முழுவதும் செலவிடப்பட்டுவிட்ட நிலையில்தான் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்த நிவாரணத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். இதுபோன்ற அசாதாரண பேரிடருக்கு, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்துதான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும். எனவே, பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

முற்பகல் 11-15

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.